31

ஸ்ரீ

கண்ணன்
காவடிச்சிந்து

இஃது

தென்திருப்பேரை ஜோஸ்யர்

ஸ்ரீ பிச்சுவய்யங்கார்

அவர்களால் இயற்றப்பெற்று

கல்லிடைக்குறிச்சி

மகா-ள-ள-ஸ்ரீ S. S. சங்கரய்யர் அவர்கள்

பொருளுதவியால்

அம்பாசமுத்திரம்

விவேகாநந்தா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

Copy Right Registered.

[...் விலை] —— [அணா 6

MAY 1922

O-,IMPV2, K
N22
180289

894.811
2639

ஸ்ரீ

ஸ்ரீ கண்ணபிரான்.

முகவுரை.

காவடிச்சிந்தென்பது, காவடிகட்டித் தோளில் வைத்துக் கொண்டு செல்லுவோர் பாடுகிறதொரு நூலென்று பொருள்படும். காவடி யெடுப்பதும், அதற்கேற்ற பாடல்கள் இசைத்துப் பாடுவதும், இன்று நேற்று வந்தவைகளல்ல; பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது தமிழ் நாடுகளில் நடைபெற்று வருகின்றவை யாவர்களும் அறிந்ததே, எந்தக்கவிவாணரும் மூவகைத் தமிழில் ஏதேனும் ஒன்றை யிசைத்துப் பாடவாரம்பித்தால்; அந்நூலுக்குரிய பாட்டுடைத் தலைவனை நாயகனாகவும் கவிதா நாயகியாகவும் வைத்து, அன்பு மேலீட்டாற் கொண்டமைத்துப் பாடுவது, தொன்றுதொட்டு உலகவழக்கமாயிருந்துவருகிறது. இதற்கு நமது ஆழ்வாராதியர் செய்தருளிய திவ்யப்ரபந்தங்களேபோதிய சான்றாகும்.

இதில் தலைவனைச்சேர்ந்தும் பிரிந்தும் ஊடல்கொண்டுமிருக்கிற தலைவியின் மனோபாவத்தை எடுத்துக் கூறுவதுபோல் அகப்பொருட்டுறையினும் சில பாடல்கள் புனைந்துரைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்நூல் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் ஒருங்கே இன்பம் விளைவிக்குமென்பது அவரவரனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். இழுக்குடைய பாட்டுக்கிசைநன்று என்பது போலல்லாமல் நகர்வளம், மலைவளம், வாவி, கோயில் முதலிய வளங்கள் நன்கமையச்சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் இத்துணைய நூலொன்று கண்ணன் விஷயமாகவுமிருக்கவேண்டுமென்று அநேகரபிப்பிராயங்கொண்டனர், எனதுகாதலும்எழுதும்படி தூண்டிற்று. இதிலுள்ள சிங்காரவர்ணனைகளைக்கிஞ்சித்துங்கவனியாமல் 'மன்னுமாதவன் சரிதமுமிடையிடை வழங்குமென்னுமாசையால்' என்றுரைப்போல யானும் இந்நூலெழுதலாயினேன். இதிலுள்ள குற்றங்குறைகளை 'சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன் சங்குசக்கர மேந்துகையானே பிழைப்பராகிலுந்தம் மடியார் சொற் பொறுப்பது பெரியோர் கடனன்றே' என்கிறபடியே அன்பர்கருதாது குறைகளைத்திருத்தும்வண்ணம் வேண்டுகிறேன். காவடிச்சிந்தின் மெட்டுகள்

180289
0-1,1M1V2,1c
1l2

போன்ற மெட்டுகளைக்கொண்டு கண்ணபிரான் விஷயமாகவமைத் துப்பாடப்பெற்றமையால் இந்நூலுக்கு 'கண்ணன் காவடிச் சிந்து' எனப்பெயரிடப்பட்டது. இங்கு கண்ணனுக்கு காவடி யென்பது எவ்வாறு பொருந்தும் என கேள்விக்கிடந்தருகிறது. இதற்கு விடை யளிக்கத்தகுந்த ஆதாரம் ஒன்றிருப்பக்காணப்பட வில்லை எனினும், எனது சிற்றறிவுக்கெட்டியமட்டும் யுக்தியா யொன்று கூறுகிறேன். அதாவது இவனவதரித்த குலத்துக் கேற்ப அன்னார்நடையுடை பாவனைகளைப் பின்பற்றி யொழுகலா யினன்'பெற்றம் மேய்த்துண்ணுங்குலத்திற் பிறந்தவன்' என்பது தோன்ற 'கொண்டதாளுறி கோலக்கொடுமழு தண்டினர் பறி யோலைச்சயனத்தர்' என்கிறபடியே இவன் கானகந் தனிலுறுந் தோறும் தம்மைப் பாதுகாப்பானுண்ணுந்திறமைகண்ட எண்ணி ரண்டாட்டைப்பிராயமுடையஇடையர் பால்ததிக்குட்டுவம்இரு சுமையோர் நடையாம்படி வேயினிருபிளவா லார்த்துவிசித்த தொன்றெனக்கொள்க. இதுவே காவடி யென்பதாகும். இதைத் தோளில் புனைதரக்கொண்டு சிந்துபாடிச் செல்வரென்க. எனெ னில் 'இசைக்குப்பளுவு மிலகுவாகுமன்றோ', அன்றிக்கே இவன் வேணுகானப்பிரியனுகையாலும் இச்சிந்துபாடிச் செல்வரென் றுணர்க

முதலாயிரம் பெரியாழ்வார்திருமொழி மூன்றும்பத்து முதல் திருமொழி ஐந்தாவது பாசுரத்தில் 'கப்பாலாயர்கள் காவில்கொ ணர்ந்த கலத்தொடு சாய்த்துப்பருகி' என்பதும் காண்க.

இந்நூலை ஆதரித்து யாவருக்கும் உபகாரமாகும்படி அச் சிட்டுத்தந்த கல்லிடைக்குறிச்சி ஏகாம்பரபுரம் தெருவிலிருக்கும் ப்ரம்மஸ்ரீ S. சுப்பையாவய்யரவர்கள் குமாரர் S. S. சங்கரய்யர வர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனமும் நன்றியறிதலும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முகவுரை முற்றிற்று.

கவி. ஸ்ரீ பிச்சுவய்யங்கார்,

கா = காவடி

கப்பு = தோள்

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
பிரம்மஸ்ரீ R. ஹரிஹரபாரதியவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

தண்ணன் காவடியோடி வளர்த்திடுஞ்
சாலிசூழ் திருப் பேரை நகரினோன்
சாற்ற வென்றவுடன் கவி நூற்றின்மேற்
சாற்று பிச்சுவெனும் பெயர்ப் பாவலன்

திண்ணன் காவடி மேலடி வைத்துமுன்
சென்று மேய்த்து மழைதடுத்தான் றனைச்
சிந்தையாகுஞ் செந்தாமரைப் பீடத்துச்
சிறப்ப வீற்றிருப் பச்செய்து கார்முகில்

வண்ணன் காவடியே னுனடைக்கலம்
மற்றொர் பற்றிலன் வாழ்விலுந் தாழ்விலும்
வாயுங்கையுந் துதித்து வணங்கிடும்
வாழ்க்கைபே யெளியேற்கருள் வாயெனக்

கண்ணன் காவடிச் சிந்தினைச் செப்பினன்
கடைபடாத வமுதுங் கணுவில்லாக்
கரும்பு மீங்கில்லை யாங்கதற் கோரிணை
கழறுமாறெவன் காசினி யோருக்கே.

ஸ்ரீ

கண்ணன் காவடிச்சிந்து.

இராகம்—நாட்டை, தாளம்—சாப்பு

1 திரையுற் றெழின்மிகுந்த பரவைத் துயிலொழிந்து
திகழத் துவரை வந்த மாயனை மன
மகிழப் பரவுதொண்டர் நேயனை புயல்
சேரவே புரு கூதனேவிய கோரமாமழை மீதுரு தொரு
சிகரக் கவிகைகொண்ட சீலனை வங்கி
யகரத்திசைபயின்ற பாலனை

2 விரைவுற் றெதிரில்வந்து பருவக்குழவியென்று
மருவித்தரவு கந்த பூதனை உயிர்
மடியக்குய மருந்து நீதனை மன
மேவிநீர் விளையாடுகோபிய ராடைகோடியர் நாகமீதினில்
விகடச்செயல் புரிந்த வீரனை மணி
மகுடத்தவர் வணங்கு தாரனை

3 அரையிற்று கிலுரிந்தவ மயத்தபயமென்ற
அரசிக்கருள் புரிந்த தோளனை துள
விரஸப்பெருக்க மைந்த தாளனை முனம்
ஆனைகூவிய போதிலேகிய மூலனாகிய நீலமேனியன்
அமுதக்கடல் கடைந்த தீரனை கடை
துமிதத்ததி நுகர்ந்த சோரனை

4 உரையிற் பொலிவுதந்து மனதிற்களி சிறந்து
உலவப் பொருணிறைந்து கூடவே விரை
வலகிற்கவி புனைந்து பாடவே அன
மூருதாமரை வாவிசூழ்குரு கூரின்மேவிய மாறனார்கலி
யுகவற் புதனிரண்டு தானையே நய
முதவப்பணிவ மிந்த வேளையே

கண்ணன் துதி

இராகம்—நாதநாமக்கிரியை தாளம்—ஆதி
கானடா, ஸஹானா தாளம்—சாப்பு

1 அன்புதரு பஞ்சவர்கள் தூதன் இந்த
வவனியெலா மோரடியளந்தவிரு பாதன்
இன்பமிகு செங்கமலை நாதன் துணை
யென்று நிதமுந்தொழுது நன்றுபெறுவாமே

2 சந்ததமுங் கோவியர்கள் மோகன் தனைச்
சரண மெனவந்த வர்க்கருள் முகி லாகன்
செந்திருவு கந்தணையும் போகன் இரு
செய்பொனடி மீது கவிச்சிந்துபுனைவாமே

3 துர்ச்சனர்கள் ஸகவாஸம் விட்டு மனத்
துணிவுடனே கண்ணனிடம்வழியடிமை பட்டு
அர்ச்சனையொடின்னமுத மிட்டுத் தின
மஞ்சலிகள் செய்தவரை நெஞ்சினினைவாமே

4 சங்குகதை வில்லாழி கத்தி கரந்
தரித்து மணமாலை யிருபுயமீதி ருத்தி
பொங்கு கடலுப்பளொரு தத்திப் பணப்
பொன்னு கவணையனடி யெந்நாளு நினைவாம்

வடமதுரை நகரவளங்கூறல்

இராகம்—காப்பி, பியாக் தாளம்—ஆதி

1 சிந்துர மழைத்தமுதன் மூலன் துதி
செய்பிச்சு தாஸரகனு கூலன் அவன்
திகழும்வடமதுரைப்பதி நல்வளமகிமை
தேனே சொல்லுவேனே

2 சந்துகமழ் செண்பகம சோகம் புன
சங்கமுகு தெங்குமிகு நாகம் விண்
தாவுங்கலை கணிறைமேவுங் கதிர்மதியுந்
தளரும் படி வளரும்

3 மகமேரு வொத்தபல மேடை தனின்
மாதரணி கஸ்தூரி வாடை உயர்
மாகமடைந்தையர் களாகமுழுவதுங்க
மழுமே புளகெழுமே

4 சிகர நெடுமணிமாட வீதி திகழ்
செம்பொன்மதி லும்பர்வரை மோதி ஒளி
செய்யு மிரதப்பருதியைய விலகிக்குடகிற்
சேரும் படிநேரும்

5 ஆதிமறையோர் புகலும் வேதம் வெகு
அழகானரஸ ஸாம கீதம் எழி
லன்னநடை மின்னலிடையங்கனைமார் கொஞ்சிவிளை
யாடுங் கிளிபாடும்

6 சீதகமலங்கணிறை வாவி அதிற்
செங்காலனங்கள் பல மேவி வெள்ளைச்
சிறகையுதறல் கண்டு சினைமீன் வெருளிகொண்டு
சீறுந துறைதோறும்

கோயிற் சிறப்பு.

இராகம்—கேதாரம், காப்பி தாளம்—ரூபகம

1 மாநகர் தென்பேரை வாஸன் கவி
மாலைபுனை பிச்சு தாஸன் அதி
மதுரக்கனி ரஸமொப்பிடு மொழியைத்திரு வுளம்வைத்தருள்
வண்ணன் மலர்க் கண்ணன்

2 ஆனிரைப்பின் செலும் பாதன் பதி
னாறுயிரம் பெண்க ணாதன் வள
ரழகாகிய நகர்கோகுல பதியாலய வளமேமற
வாதே சொல்வேன் மாதே

3 மின் கெருடத்வஜ மாகம் வரை
மேவு வதாற்கரு நாகம வெகு
விரை விற்கலை மதியைத்தொடர் வதைவிட்டுளம் வெருவிக்கடல்
வீழும் எந்த நாளும்

4 பொன் மயவுன்னத விஞ்சி தாவிப்
போகக் கருமுகி லஞ்சி மலர்
புனமாகளெனவே மினியவணுய கனருள் போலவே
பொழிக்கும் புவி செழிக்கும்

5 தங்க விமானத்தின் தூவி யொளி
தாவியே விண்ணகர் மேவி உயர்
தானத்தவர் ஞானச்சுடர் போலத்திகழ் கோலக்கதிர்
தயங்கும் படி வயங்கும்

6 மங்கல சோபனம் பாடி தேவ
மாதர்க ளொன்ருகக்கூடி உள
மகிழப் பணிவொடு நிற்பது மெழிலைத்தரு மரசர்க்கடல்
வழங்குஞ் சங்கு முழங்கும்

7 மாடகயாழிசை யோடுஞ் சிறு
மாதர்கள் சங்கீதம்பாடும் அணி
மணிமேகலை கழனூபுர மடவேசையர் நடமாடுத
லார்க்குங் களி கூர்க்கும்

8 ஆடரவக் குடையானை அன்போ
டாதரித்தார்க் குடையானை மிக
வழகாகிய மகவானிரை யொடுபூதல வரசாளுநை
யடுக்கும் பலன் கொடுக்கும்

மலைவளம்.

இராகம்—இந்துஸ்தானி தோடி தாளம்—சாப்பு

1 வண்டுகிண்டுந் தண்டுளவச் செண்டுகொண்டுந் தொண்ட (ருடன்
மண்டலீகர் தெண்டனிட நின்றவன் இந்த
மண்டலத் தரக்கர்களை வென்றவன் திரு
மாதுதங்குது வாரகாபுரி மேவிவந்தகு சேலமாதவன்
வரவுள மகிழ்ந்தெதிர் சென்றவன் கையில்
தருபொதி யவலைய யின்றவன்

2 பண்டுவரை கொண்டுதிரை மண்டு கடலைக்கடைந்து
பண்ணவருக் குண்ணமுது தந்தவன் துதி
பண்ணும்பிச்சு செந்தமிழ்க்கு கந்தவன் வளர்
பாலகாவலர் பேவியே தொழு சோலைமாமலை மீதிலேயெழில்
பரந்த வளங்களைநா னெண்ணியே சொல்ல
விரைந்துமே ளடிகயற் கண்ணியே

3 தாளடர்ந்து மூடிகொண்ட வேய்வளர்ந்து வானிலண்டர்
தானமெங்குஞ் சென்றிறைக்கு முத்தமே பெண்கள்
தாருடனே கோத்தணிவர் நித்தமே கிளை
தாவுசந்தகின் மீதுமந்திகள் கூடிநின்றயல் வானிளங்கதிர்
தன்னைக் கடுவற்குக் காட்டுமே அது
தின்னுங்கனி யிலையென் றோட்டுமே

4 பாளை விரியுங் கமுகிற் காளமுகில் வந்தணவப்
பாகமயில் தோகை விரித் தாடுமே சக்ர
வாகமுந்தன் சேவலுடன் கூடுமே அரும்
பாதபங்கய மீதிருந்திழி தேனை யுண்டெதி ராகவந்தளி
பைரவி கல்யாணி ராகம் பாடுமே நறுங்
கைரவ மலரி னுைா சாடுமே

5 கந்த மகரந்த மலர் சிந்துநறை கொண்டு குறக்
கன்னியரிள மான்பிணைக் கூட்டுமே கண்டு
துன்னு வரிவேங்கையும் வாலாட்டுமே நெடுங்
கானகந்தனிலே மிகுந்திட மானவெங்கரி வானிலங்கிய
கற்பகக்கிளை மேற்கர நீட்டுமே கன்றுக்
கற்புதக் குழையை யொடித் தூட்டுமே

6 அந்தரத்தடர்ந்து வளை சந்தனத்தருவின் கிளைக்
கப்புறம் போய்த்தெக்குதலை சாய்க்குமே மடல்
குப்புற வீழ்ந்தே பிறையைத் தேய்க்குமே திர
ளாகவம்புதி நீரருந்தி யுலாவுகொண்டலை யானையென் றெதி
ரடுத்துச் சினந்தறுமுன் சிங்கமே விண்ணிற்
படுத்துப் பயங்கொளுமா தங்கமே

7 நீடரங்க மேவுமணி நூபுர கங்காநதியி
னீந்திவிளை யாடுபல குஞ்சரம் மது
மாந்திவரு வேடர்விடு வெஞ்சரந் தனை
நேருமென்றய லோடியேகரை மீதுநின்றிடல் காணுமேயிவர்
நீலநிறப் பாறையென வெண்ணியே சென்று
வாலுளுவை மீதிடுவர் கண்ணியே

8 ஆடரவ மோடுபுன லாறுசடை யோதுமைமா
னம்புலி செம்பொற் கடுக்கை யாருமே நிதங்
கும்பிடுநற் சங்கரனை நேருமே உயர்
வானமாமலை மீதிலேதிரு மாலிருந்தருள் கோவிலின் வள
மனைத்தையும் புகழவொரு நாவையே தந்தான்
கனத்த மலரி லயன் பாவையே

வாவி வளம்.

இராகம்—ஆனந்தபைரவி

1 மின்னைத் தழுவுமுகிலாக னிந்த
மேதினி போற்றுங்கன யோகன் சின
மேலிட்டெழுஞ் சூரர்மீதிற்கணை யேவும்
வாகன் மதி யூகன்

2 பின்னை யிடத்துமதி நேசன் கவி
பிச்சுவின் சிந்தைதனில் வாஸன் வளர்
பேரா புரிநகர் வாவிமகிமையைப்
பேதையே கேளிப் போதையே

3 வெள்ளத்தலை தாளம் போடும் மலர்
மேவியே வண்டிசை பாடும் கரை
மீதிற்குருவிச்சென்று கூவிக்கே
கோ வென்று கூடும்மயிலாடும்

4 பள்ளத்திலே படகோடுங் கயல்
பாய்மர மீதிற் போய்ச்சாடுந்
திரைபாயுந் தோறுங்கரை யோரஞ்சேரும்
பசு மாமைச்சினை யாமை

5 நீலக்குவளை கண் காட்டும் அங்கு
நின்றெழுந்தாம் பல்கை நீட்டும் கதை
நீளச் செறிந்தடர் தாழைச் செழுமலர்
கூட்டுஞ் சோற்றை யூட்டும்

6 சாலப்பறவைகள் கூடும் பல
சஞ்சரிகஞ் சுழன் றாடும் பெருந்
தாகத் தொடுந்திரி மேகக்குலம் வந்து
பொருந்தும் புனலருந்தும்

7 விண்ணி னுடுக்குல மானும் மலர்
மீதினிற் கெண்டைமுத் தீனும் அதை
மேவிக்குருகின மாவிச்சினைக
ளென்றுக்கும் அடைகாக்கும்

8 தண்ணீர் முகந்தய லேகுஞ் சிறு
தையலர் பின்செல லாகும் அவர்
தாளினடைகற்று மீளுஞ் செந்தேனுற்ற
கஞ்சந் தனி லஞ்சம்

வியன் பகரல்

இராகம்—பியாக் தாளம்—ஆதி

1 பலபகலவனென வொளிர்மணி நிறுவிய
பரிபுரவணி யொலி தரமருதிடைதவழ் பாதன் நவநீதன்

2 குலமணியணி திகழ்குயவிடைமடவியர்
குடிநெறுநு கரளையுரமிசை யொழுகிய கோலன் பரிபாலன்

3 அமுதலமரலுற வரசவையுரிதுகி
லவளரை நிறைபெற வருளியகருமுகி லாகன் பதபாகன்

4 செழுமதுகர மிசைதருசததளவிக
சிதமலருறை விதிசெவிபுகமறையுப தேசன் ஜக தீசன்

5 வெகுளியொடெதிருநள் சகடுடல் பொடிபட
விரலணிமருவிய பதவுதைபுரிஜய வீரன் நல்லுதாரன்

6 நகைமுக மிருகுவலயதள விழிகொடு
சமதிடராழிவுற வருளியமணமலர் நாபன் பிரதாபன்

7 வளைசிலையுறுகர விஜயனைவருமெனை
மருவியதிசை தொறும் பரிரதநடவிய வாகன் கனயோகன்

8 பழமறையடிநடு முடிவரைமுறையிடு
பரமனையலர்மகள் கொழுநனையனுதினம் பாடுஞ் சுகநாடும்

துணையிரத்தல்

இராகம்—ஆனந்தபைரவி

1 பருவதக்குடை பிடித்தோனே புண்ணியவானே மனம்
பாழிலே திரியாமனின் பதமேவியே
தொழ நீயுமன்பொடு பாரா யிடர்தீராய்

2 கருவினிலினி புகுத்தாதே புவிமீதே இந்தக்
காயமே நிலையா தழிந்திடு மாதலாலுனை
மேவினேன் சினக்காதே கைவிடாதே

3 மதனன் செய்கொடுமை யினாலே மண்ணின்மேலே சிறு
மாதராருழி மேவுசிந்தை யதான தாலுனை
யாதி கொண்டிலன் வாதே புரியாதே

4 விதரண சரமணி மாதா திருநாதா மனம்
வேறுபா டடையாது நின்பெயரோதியே
கவிமாலையும் புனைவேனே பெருமானே

5 கதமுறு சமன்வரும் போதே யுறங்காதே இரு
காதிலே குழையாட வந்தயன் மேவியே துணை
யாக நின்றெனைக்காவே யருள்கோவே

6 மதகரியிடர் படுங்காலே வந்ததாலே உயர்
வானினும் புவிமீதினும் பரனாகை யாலுனை
யாவருப் பணிவாரே யருள்சேரே

7 ககபதி பணியிருதாளா குணவாளா மிகு
காதிலே மனமான போதினு நீயுமே
தரலாகுமே ஜகநாதா குழைக்காதா
8 நகைமுக தேவகி பாலா பரிசீலா ஒரு
நாளுமே மறவாத சிந்தையன் ஞானமே
வடிவான நின்சமுல்யானே யுன்னுவேனே.

நெஞ்சறிவுறுத்தல்.

இராகம்—செஞ்சுருட்டி.

1 கந்தமாமலராள் வந்து மார்பினுறங்
கண்ணன் பாத கஞ்சமே நமக்
கெண்ணுமேவு தஞ்சமே இந்தக்
காயம் வெறும் வஞ்சமே மிகு
காமலோப மத மோகம் யாவும்விட்டுக்
கருதுவாயே நெஞ்சமே

2 இந்தமாயவுட லெந்தவேளை யழி
வேற்குமோ தெரி கில்லையே இது
பார்க்கவோ வெரு தொல்லையே நனி
யிசமான குல்லையே கமழ்
எந்தை பாதமிசை சந்தமான கவி
இசைந்து சூட வல்லையே

3 பங்கயங்க ளிரு செங்கை திங்கள் முகம்
பந்திர டெனுங் கொங்கையே அள
கந்திரண்டது கங்கையே பாத
மீது சதங்கையே திகழ்
பானலோடு சரி கூறலான விழி
பதுமலாஞ்சன நங்கையே

4 சங்குமானு மிட றங்கமோது மினல்
சந்தமிஞ்சு நடை யனமே கிளி
வந்துகொஞ்சு மனு தினமே எனச்
சார்ந்து பெண்களெவ் வனமே புகழ்
சாற்றினு லிடமை மாற்று மாதவனேச்
சார்வதெவ்வாறு மனமே

5 தண்டுசூல மிவை கொண்டு பாசமொடு
சண்டன் வந் ததட்டுமே கபந்
தொண்டையிற் குமட்டுமே அது
தவிற்கவே முறை யிட்டுமே ஸார
மான நவநீத சோரனிரு
தாளையோது விரட்டுமே

6 பண்டு செய்ததவங் கொண்டுதாஸன் பிச்சு
பாடு காவடிச் சிந்தையே பரி
பாகமென் றுணர்ந்தையே சந்து
பஞ்சவர்க்கு நடந்தையே பரி
பாலகா யெனை யாளுவா யென
பக்ஷமோ டுரை சிந்தையே

தாயிரங்கல்.

இராகம்—பைரவி அட—தாளம்

1 அத்தராத்திரி வேளையில் வீட்டு
மெத்தையில் வந்து தாவி யாரு
மறியாம லுள்ளே பேவி என
தணங்கினைப் பையக் கூவி எங்கோ
அழைத்துச் செல்லுவானைத் தடுத்துச் சொல்லப்போனேன்
அதட்டிவிட்டா னந்தப் பாவி

2 மைத்துனன் பெண்களைக் குற்றமே சொன்னேன்
வாய்த்ததெனக் கிந்த த்வேஷம் என்று
மாறுமோ கால விசேஷம் இனி
வாய்திறந் தால்வருந் தோஷம் மட
மாதைக்கொண்டோனவர் தூதைக்கொண்டோனெனின்
மன்னுமே மெத்த ஸந்தோஷம்

3 வஞ்சி திரண்டொரு மாதமே தெரு
வாசலிலே யிறங் காது சொந்த
மாளிகை வாழு மிப் போது குல்லை
மாலையன் பின் சென்ற தேது மண
வாளனொருவனைக் கூடுமுன் யார்செய்த
வஞ்சகமோ யிந்தச் சூது

4 பஞ்சும ணிச்சமுந் தூவியும் மிதி
பட்டாலிவள் தாழ ஞோகும் அங்கோ
பச்சைப் பசுந்தரு வேகும் நாற்றுப்
பாவின நெற்பொரி யாகும் அந்தப்
பாலை வனந்தனிற் காலைவைத்துச் சிறு
பாவையு மெப்படிப் போகும்.

5 சோலை நிறைந்ததென் பேரை மாநகர்
துங்கன் கவி ஸ்ரீநி வாஸன் சுதன்
எங்கும் புகழ் பிச்சு தாஸன் துதி
சொல்லிப் பணியும் பொன் வாஸன் நிதந்
தோத்திரஞ் செய்வோரைக் காத்திரட்சித்தருள்
சுந்தரி ருக்மணி நேசன்

6 காலப் புயலனை யான் வேணு
கானத்திலே மன துண்டு அந்தக்
காரணந் தானவன் கண்டு மெள்ளக்
கடத்தலா மென்றெணிக் கொண்டு செய்த
காரியமாமிது நாரியும் பின்செலக்
கடவுள் விதித்ததே பண்டு

7 ஆசைமீறிய காமமே தெரி
யாதவட் கிந்தச் சீலம் வர
யாருடன் கற்றதிக் கோலம் இந்த
யறியா திருந்ததென் காலம் இனி
யாகிலுஞ் சிறுபெண்களை நல்வழிக்
காக்குவதே யனு கூலம்

8 நேச நிறைந்தவென் பெண்ணும் நவ
நீதகரன் புணர்ப் பாலே இனி
நேரும் வயிற்றினிற் சூலே அதை
நீக்குவதார் புவி மேலே என்
நெஞ்செனும் வஞ்சயை யஞ்சேலஞ்சே லென்று
காத்தருள் திரு மாலே

தலைவி மனப்பான்மை கூறல்.

இராகம்—சாவேரி
அட தாளம்

1 காசினி யோர்புகழ் பேசுமெழிற்குழைக் காதனை
கமலத்திரு நாதனை நெஞ்சிற்
கருதுந்தோறு மென்னைப் பொருதுதே காம வேதனை

2 கூசலொடு வீசிமாலி யெழுந்திரைக் கூட்டமே
மன் மத்னும் போராட்டமே செய்து
கொண்டிருந்தா லெனக் கென்றுதீரும் மனவாட்டமே

3 தாவு துரங்கத்தின் மீது துலங்குவெண் சங்கமே
தென்றல் படுத்து பங்கமே விண்ணிற்
சந்திரன் செய்கையா ளுெந்து மெலிந்த தென்னங்கமே

4 மேவிய நீர்மிசை துள்ளித்திரி கெண்டை மீனமே
வேறு முண்டோ மானமே தனம்
வீங்குவது கண்டு யேங்கியருந்திலேன் பானமே

5 மின்ன லொடுதிகழ் விண்ணிலுறைகின்ற மேகமே
உன்போலவ ளுகமே இந்த
மேதினி காப்பவன் காதிற்சொல்வா யென்தன் மோகமே

6 முன்ன மொருதின மென்னைக்கலந்தாசை மூட்டியே
இன்ப ரஸங் காட்டியே சென்ற
மூதறி வாளனெப்போது வருவான் சீமாட்டியே

7 தங்கியெதிர் தொழு மிங்கிதப்புட்கொண்டு தாவியே
கமலப்பெரு வாவியே வருந்
தாதானை காத்ததி மேதாவியே யெனதாவியே

8 எங்கு நிறைந்தவன் சங்கத்திலாசைகொ ளென்னையே
யேசுகிறு ளன்னையே முன
மென்மனங் கொண்டவன் மைம்முகிலாகையா
லேற்றுக் கொள்வானிந்த மின்னையே

தலைவியின் ஊடல்.

12-வது மெட்டு. இராகம்—அடாணா

திங்களுதற்சிறு பெண்களிலெங்களைத்
தேடியோ இங்குவந்தாய் மணிக்
கங்கணச் செங்கையைப்பற்றி யிழுக்கிறாய்
காரிய மென்னினைந்தாய்

பங்கப்பழிப்பிலா ருக்மணி சத்திய
பாமா வுனக்கில்லையோ அவர்
தங்களைச் சேராமலிங்கே வந்தாய் கிர்ஷ்ணஸ்
ஸாமிக்கே நாம்விலையோ

கட்டித் தயிருண்டு மத்தாலடிபட்ட
கள்வனே தூரநில்லாய் என்னைத்
தொட்டுச் சரசங்கள் செய்யாதேகாலிநீ
கட்டிலையோ செல்லாய்

குட்டுப்பட்டாலும் பொன் மோதிரக்கை யென்று
கூறும் பழமொழியே ஒரு
சுட்டித் தலையனைச் சேர்ந்து விட்டாளெனச்
சொல்லுவர் வீண்பழியே

காலிகள் பின்செலுஞ் சோலியை விட்டுநீ
காமப் புனந்திரிவா யெனிற்
பாலிக்கு நேர்மொழிப் பாவையரைப்பரி
பாலிப்ப தாருணர்வாய்

வேலிபயிரை யழித்து விட்டாலதன்
மேலெவ ரென்புரிவார் வன
மாலிக் கழகிலை கேலிக்கிடமிது
வாகு மென்றே பகர்வார்

செங்கை வளையிட்டு நாவற்கனியுண்ட
செய்கையே போதுமையா இன்னு
மெங்களைப் பண்டு போலேமாற்றப்பார்ப்பது
யேற்குமோ சூதுமெய்யா

தங்கச்சரப்பணி வங்கிக்காறை யென்றுய்
தாசிகள் நாமல்லவே குல
மங்கையர் கற்புறியாததே கோடிபொன்
வாய்க்கு நீம்பாமெல்லவே

பாங்கிதலைவியின் நிலைமையை தலைவற்குணர்த்தல்.

13-வது மெட்டு. இராகம்—தோடி

கண்ணாயிரம் படைத்தோன் விண்ணூரிடம் வளர்த்த
கடிகமழ் கற்பகம் படியினிறுக்கிய கண்ணனே செழுங்
கமலநிறைத்தொளி ரெழிலிநிகர்த்திடு வண்ணனே

நண்ணூரவை விரித்த பெண்ணேணர் குழன்முடித்த
நளின மலர்த்தவி சுறை பவளைப்புணர் நண்பனே பிச்சு
நகைதருமுத்தமிழ் புனைகவி மெச்சிய பண்பனே

பொன்னுடை ருக்கமுது முன்னு ளளித்தவொரு
புனிதமதி முகவணிதை யிவளெனும் பொற்பினள் மணம்
பொதுளுங் குழலருந் ததியைநிகர் தருங் கற்பினள்

கன்னிப்பருவ முதலுன்னைப் புகழ்ந்துரைக்கும்
கமழ்தரும்பொற்குய மடவாற்குன்னிடங்காணுதே மையல்
கருதுந்தோறு மெய்யிற் புளகாங்கிதங்களுந் தோணுதே

செஞ்சொற் கிளிகளொடு கொஞ்சிப்பழகு மிவள்
சிறுகட்கு மின்மொழி செவியிற் புகக்கண்டு தியங்கினள். உன்னை
மருவிச் சுகம்பெறும் வழியைத் தெரிந்திட மயங்கினள்

புஞ்சக்கணை மலரோரஞ் சிற்கென வளைத்த
புகழ்தரு மன்மதன் திகழ்கரங் கொள்கரும் புருவத்தாள் தவம்
புரிபவரைத்தன தடிவருடச்செய்யும் பருவத்தாள்

காணுங் கனகவரை யானை மருப்பொடிணை
கமழ்களபத்தன முடையவள் செங்கயற் கண்ணினள் உன்தன்
கருந்துளவப் புயம் பொருந்தத் தழுவுதற் கெண்ணினள்

சேணிற்பாவு புகழ் தேவகிபாலா இந்தச்
செறிகுழன் மங்கையைக் குறிகொண்டனுதினஞ்சேரய்யா. இவள்
அறிவிற்குறுந்துணை யுனையன்றிச் செய்பவராரய்யா

தலைவி பாங்கியைத் தூதுவிடுத்தல்.

14-வது மெட்டு. இராகம்—செஞ்சுருட்டி—கேதாரகௌளை

வையம்புகழ் பிச்சுதாஸற்கொருதுணை யானவன்
வேணு கானவன் சொகு ஸானவன் ப்ருந்தா
வனத்திலாயர் பெண்டு தனத்திலாசை கொண்டு
போனவன் மெல்லப் போனவன்

செய்யவளந்தருங் கோகுலவாஸனைத் தேடுதே
மன நாடுதே தளர் வாடுதே யிரு
செங்கை யணிந்ததங்கக் கங்கணங்கள் கழன்
றோடுதே விரைந்தோடுதே

கோரமாகமலர்ச் சோலைதோறுங் குயில் கூவுதே
பய மேவுதே மனம் வேவுதே விசை
கொண்டு துதைந்தகுல வண்டுபாடிங்கு தலை
நோவுதே மிக நோவுதே

ஆரமெறிந்தலை சேரநெடுங் கட லார்க்குதே
மைபல் கூர்க்குதே முகம் வேர்க்குதே யென
தங்கிலை குலைந்த தெங்கும் பசலைவந்
தேர்க்குதே வந் தேர்க்குதே

மந்தமாருதமும் வந்து மேனியெனை மாட்டுதே
வெறி யாட்டுதே வெளி காட்டுதே மதி
மாகமீது நின்று தாகமான தழ
லூட்டுதே பரிந் தூட்டுதே

உந்துமாரன் கணைமைந்துங்கூடிவந் துருக்குதே
தனங் கருக்குதே அரு வருக்குதே அன்னை
யூட்டும் பாலுஞ்சோறுந் தேட்டமில்லா துளம்
வெறுக்குதே உண வெறுக்குதே

திட்டமாகயின்னு மெட்டுநாளில்வந்து சேருவேன்
களி கூருவேன் மயல் தீருவேன் என்ற
தீரன்வரக்காணே மாறுமாதக்கால
நேருதே யித மூறுதே

மட்டறுததொடை கட்டிராதை தர வாங்கியே
மன மோங்கியே புயந் தாங்கியே வரு
மாதவனுக் கென்தன் சேதி சொல்வாய்
சர சாங்கியே என் பாங்கியே

பாங்கிதலைவியியைப் புழ்ந்துகூறி தலைவனையழைத்தல்.

15-வது மெட்டு இராகம்—பூரி கல்யாணி

சந்தமறைதந்த ஜக நாதா மண
மூந்து கமலந்தனிலே வேதா துதி
தந்துநிதம் வந்துபணி பாதா
நவநீதா குழைக் காதா வன
சந்தவிசி னிந்திரை சமேதா •

செந்தமிழ்தேர் பிச்சுவையோ ரஸாக் கொண்டு
கந்தநறுஞ் செந்துளவத் தாளா விரு
செங்கனகக் குன்றனைய தோளா
தயவாளா வெகு நாளா யுனைத்
தேடுமனப் பேட்டினெழில் கேளாய்

தெள்ளறலுஞ் சைவலமு மொத்துச் செழுந்
தேனருந்துங் காரளிகள் மொய்த்து மது
சிந்துமலர்க் கொண்டை புனை வித்துத்
தகரத்து மணம் வைத்துத் திகழ்
தேங்குழலி வாய் நகையோ முத்து

வள்ளைசெவி விற்புருவஞ் சங்கம் உப
மானமிட ருகுமின லங்கங் கலை
மாமதியி ளுனனமே துங்கம்
புவி யெங்கும் பகி ரங்கஞ் சுக
வாருதியிற் செல்ல வொரு வங்கம்

கட்டுமலர்ச் செண்டனைய கொங்கை சிறு
காந்தண் மலர் போன்ற விரு செங்கை கவி
கட்டுபவர் வர்ணனைக்கோர் சங்கை
தருமங்கைக் கொரு நங்கை இவள்
காதலிப்பதுஞ் சுகத்தின் பங்கை

வட்டநெடுங் கட்சூரங்கப் பே... ...ள்
வாள்விழியைக் கண்டுமெருண் டோடு... கனி
வாய்மொழியைக் கிஞ்சுகங்க ணுடுங்
குயில்தேடு மிசை பாடும் வன
வாசிகளுமாசை கொளக் கூடும்

இன்பவெள்ள மேற்சுழிரு ருந்தி யதற்
கேற்றவயி ருவிலைபொ ருந்தி தொடர்ந்
தேறுரோமஞ் சிற்றெறும்பின் பந்தி
இவளைந்திபக ளுந்தி னமு
ளையிச்சித்திருப்பது நீ சிந்தி

நின்பதி ஞுருயிரவர் போலே இந்த
நேரிழையா ணின்புயத்தின் மேலே வெளி
நீக்கமற வேட்கை கொள லாலே
பரிவாலே இவள் பாலே யுறு
நெஞ்சினிடர் தீர்த்தருள்வாய் மாலே

தலைவன் தலைவியை வற்புறுத்தல்.

16-வது மெட்டு. இராகம்—பூரிகல்யாணி

தண்டுலங் கொண்டிரல் நீட்டியே கூலி
தாருங்க ளென்றுகை நீட்டியே அதைத்
தான்கொண்டு போயுலை மூட்டியே உண்ணுந்
தகரக்குழ லிடைமாதரு ளெவருக்குநீ யெழிலானவள்
சாற்றினே னின்பமு தூட்டியே சுகந்
தந்திடு வாயோகண் ணாட்டியே

கண்டிதப் பூங்குயிற் சத்தமே என்தன்
காதலைத் தூண்டுது நித்தமே கடுங்
காமவெறி கொண்டு சித்தமே கொழுங்
கனலேறிய மெழுகாயின கமழ்வார்குழன் மடவாயெனைக்
கட்டியணைத்தொரு முத்தமே தந்தாற்
கைதொழுவே னுனை நித்தமே

யோடையி ராணியே சிர
ங்கூப்பிப் பேணியே தொழ
யெழில்கண்டு நாணியே மன
மெ மேவா டியர் புதுவாரெனில் இணையாரடி புவிமீதினில்
வேட்கைப் புனலுறுங் கேணியே யுன்தன்
மேலுரு மென்மனத் தோணியே

காணி லலைந்துளம் வாடியே இங்கு
கண்டுகொண் டேனுனை நாடியே என்தன்
காதலி யுன்மன தூடியே எனைக்
கலவா தினி யகல்வாயெனி லிது பாவமு முனைமேவிடுங்
காவடிச் சிந்துகள் பாடியே நாங்
களிப்புற லாமின்று கூடியே

நேர்ந்துளி நிகழ்ந்தவை நேரிழைக்குணர்த்தல்.

17-வது மெட்டு. இராகம்—பூபாளம்

நந்தகோப ரகந்தனில் மேவிய
நாலா நிலப்பரி பாலன் தூவ
மேலான வர்க்கருள் சீலன் சல
னங்களைந்து புரந்திடென்றெதி ரும்பர்வந்து வணங்கிநின்றிட
நந்துலா வுபயோததி மந்தரம்
நாட்டிக் கடைந்ததி தீரன் அமு
தூட்டிச் சிறந்த வு தாரன்

எந்தவேளையும் வந்தனை செய்தடி
யேற்றுங் களிபிச்சு தாஸன் இடர்
மாற்றுமெய் ஞான விலாஸன் பிறை
யிந்துவந்தொளி ரந்திமாலையில் வந்துவண்டிசை யுந்துசோலையி
லின்பவவாருதி யாகிய லீலைகள்
யென்னுடனே செய்தான் மானே யந்த
நன்னய மென்னசொல் வேனே

அங்குயாவரு மின்றியே நான்தனி
யாகவு லாவுதல் கண்டு
வேகமாய் வந்தெதிர் கொண்டு பிரி
யந்தருங்குய மந்தரங்களில் வந்துசிந்தை புகுந்துகொண்டது
ஆதலாலதைத் தேடுகின் றேனென
அங்கையென் மார்பிடை வைத்தான் பிர
சங்கொ ளிதழைச் சுவைத்தான்

நங்கைமார்களி லென்போ லெவரிந்த
நாட்டிற் றவஞ்செய்ய லுற்றார் பர
மேட்டியிடஞ் சுகந் துய்த்தார் ஜக
நாதனம்புய. மீதிருந்தவள் காதலன்துணை யாகுமென்றவன்
நாமமாயிர மோதுவதா லெந்தன்
நாவிற் பெருக்கமு தூறும் விட்ட
நாணமும் வந்தெனைச் சேரும்

கூடற்கமயம் ஊடல்கொண்டுரைத்தல்.

18-வது மெட்டு. இராகம்—முகாரி

தாரணியோர் போற்றும்விருந் தாவனத்தில் வந்துதித்த
தாதுலவும் பூந்துளவக் கண்ணியா எழில்
ராதைமண மாலைகொண்ட புண்ணியா
ஆருமில்லா வேளையந்தி நேரத்திலே வந்தெனை நீ
அச்சமில்லாமலே கையைப் பிடிக்கிறாய் கவி
பிச்சுவின் காவடிச் சிந்து படிக்கிறாய்

வாசமே கமழுஞ் செங்கை வீசியே தழுவு கொங்கை
வான்மதி முகத்திலிட்ட முத்தமே நினைத்
தான்மறவா திருக்குமென் சித்தமே
பேசவோ முறையுமில்லை யாசையோ விடுவதில்லை
பெண்டுகளயலிற் பரி காசமே செய்வர்
கண்டுகொண் டாலும்பெரு மோசமே

...வே பணமுந்தந்து தக்கவோர் சமயம்வந்தால்
மடையிலே யேறிவிளை யாடலாம் மன
ஆடலொன்று மில்லாமலே கூடலாம்
பக்கமெங்கும் பொற்சரிகை யிட்டபதி னெட்டு முழப்
பட்டாணிச் சேலை வாங்கி வாருமே நாளைக்
கட்டாயமாய்ச் சேருகிறேன் பாருமே

வாவிசென்ற மாமிவர லாகுதுநீ ரேகுமின்று
வந்ததுபோல் மற்றொருநாட் பார்க்கலாம் வெகு
தந்திரமாய்ச் சேர்ந்துகளி கூர்க்கலாம்
காவிநெடும் பூங்குவளைக் கண்ணியர்க ளெண்ணமெல்லாங்
கட்டழகா வுந்தனிடஞ் சேருமே இது
மட்டுமோசெவ் வாயிதழு மூறுமே.

ஆச்சியர் முறையிடல்

19-வது மெட்டு இராகம்-ஆரபி.

மாதேயசோதையெ உன்தன் சிறுமைந்தன் பலவந்தன் எங்கள்
மாளிகை தோறு மு குந்தன்
வருவானடி தினமேசிறு மடவாரொடு விளையாடிட
வந்தவ னெங்களைச் சும்மா பல
தொந்தரை செய்கிறா னம்மா

சாதி யிருவாகூகி முல்லை மலர்க்கொல்லை யதனெல்லைச் சுவர்
தாண்டிக்குதிக்கிறான் ஒல்லை
தனியாகவே மலர்கொய்திடு மிவளாரடி யெனவேசொலித்
தட்டிக்கை கொட்டியே யார்ப்பான் அவள்
தானையைப் பற்றியே யிர்ப்பான்

காலை கன்றுவிடு முன்னே யடிமின்னே மகள் பின்னே உன்தன்
கான்முளை யேகுவ தென்னே
கறவைக்கல நிறைவுற்றிட கலசத்தொடு வுறிவைத்திடும்
பாலையெல்லாங் குடிக் தாண்டி இவன்
பாலக னென்கிறா யேண்டி

மேலையகத்தொரு பாங்கி கனகாங்கி அவள் தூங்கிக் கொளும்
வேளையில் வந்துகண் டாங்கி
விலைமேவிய கலையோர்புற முறவேகடி தடமீதுகை
வெண்ணெயைப் பூசிமார்ச் சாலக் கொண்டு
உண்ணவிடுகிறான் காலம்

வைகறை பொய்கைக்குப்போனேன் அடிமானே யிவன்தானே அங்கும்
வந்து குதித்திடு வானே
மடவார்குளி துறைதேடியே இவனேதடி வரநீதியோ
மஞ்ச ளரைக்கிறே னென்றான் எங்கள்
மார்பினிற் பூசியே சென்றான்

கையிலே மாங்கனிகொண்டு ஒருபெண்டு தின்னக்கண்டு அது
காதலித்துக்கேட்ப துண்டு
கனிவேறுள தருவோமென அவள்கூறிய பொழுதே யிரு
காத்தா லணைத்திதழ் மாந்தி பெருங்
கற்பழித்தான் சங்க மேந்தி

நேசங்கொண் டங்கொரு பெண்ணை யிருகண்ணைக் கட்டித்
திண்ணை தனில்நிற்க விட்டுள்சென்று வெண்ணெய்
நுகர் போதவள் சிறுதாய்வர அவள்மார்பினி லணிசேலையில்
நீண்டகைவெண்ணெயைத் தேய்த்தான் யெனைக்
காண்டகும் வாவென எய்த்தான்

வாசலிற் பூச்சாண்டி யாரோ அடிப்பாரோ பிடிப்பாரோ அங்கு
வந்துபா ரென்கிறான் நேரோ நா
மங்கேசெல யிங்கேயவன் டங்கேதுயிர் மங்கேயினி
வாராமற் காத்திடு வாயே நஷ்டம்.
நேராமல் சிக்ஷிப்பாய் தாயே

20-வது மெட்டு இராகம்— செஞ்சுருட்டி

பல்லவி.

அநுதினமுனே வந்தனஞ்செயும்
அன்பற்கிரங்கலாகாதா (அநு)

அநுபல்லவி.

கனகவாஸ கௌஸ்துவதர
காளிங்கமர்த்தன பாதா (அநு)

சரணங்கள்.

சங்குசக்கர யிங்கிதக்கர
ஸர்வஜகபரி பாலா
திங்கள் வதன மங்களகர
திவ்யசரோருகை நாதா (அநு)

உரகசயசகமல நயன
ஓங்கும் ப்ரணவஸ்வரூபா
விரைசெய்துளவ கெருடவாகன
விஜய ஜயபரந்தாமா (அநு)

அச்சுதானந்த கோவிந்தமாதவ
அமரசரணாரவிந்தா
மெச்சிப்பணியும் ஸ்ரீ பிச்சுதாஸன்
வேண்டும் வரப்பிரஸாதா (அநு)

21-வது கீர்த்தனம் மாதவமேயிவ்வுருவாய்—என்றமெட்டு

இராகம்—யதுகுல காம்போதி

கோகுலத்தில் வந்துதித்த கோபாலா துணை யருள்வாய்
ஏகமனதாகவுந்தன் இணையடியே சரண்புகுந்தேன் (கோ

வட்டநெடுங்கடலுலகில் வானவரும்பணிந்தேத்தும்
அட்டமிரோகிணிநிசியி லவதரித்தமகிபாலா (கோ)

தவமுனிவர்போற்றிய மாதவகடைக்கண் பார்த்தருள்வாய்
பவவினையாலுலகினிலுற்பவ மொழிக்கும் வழியறியேன் (கோ)

ஸாரமிலாச்சமுஸார ஸாகரத்திற்கிடந்துழன்றேன்
பாரவினையெனைத் தொடர்ந்துபற்றி யிடர்படுத்துதையா (கோ)

பச்சிலையைக்கீடமணம் பற்றியரிப்பதுபோல
இச்சையெனும் புழுக்குடைந்து யென்மனப்பாழ்படத்தகுமோ (கோ)

தந்தைமடி விட்டகன்று தவம்புரிந்த சிறுதுருவன்
உன்தனருளாற் சிறந்தவுயர் கதியைப்பெற்றிலையோ (கோ)

தங்கவுடலோனவுணன் தடங்கைபுடைத்திடு நெடுந்தூண்
பங்கமுறக்கேஸரியாய் பாலகனைக்காத்திலையோ (கோ)

மோனமுறும் பஞ்சவர்கள் முன்னிலையிற் றுகிலுரிய
தானையளித்தவள் மானந்தளராமற் செய்திலையோ (கோ)

வண்டுழக்கும் புண்டரீகவாவிதனிற் கூவிநொந்த
புண்டரகேளிக்கிடரைப் போக்குவித்தாய் புண்ணியனே (கோ)

இளந்தைமுதலிது காறுமேத்தியுனைப்போற்றும் பிச்சு
உளந்தனில் நின்றருள்புரிவா யுனக்கதுவும் வியப்பாமே (கோ)

புத்திதரும் முத்திதரும் புத்திரவுற்பத்திதரும்
பத்திதருங்கண்ணன் காவடிச்சிந்தைப் படிப்வர்க்கே (கோ)

22-வது மெட்டு இங்கிலீஷ்—நோட்டு

இந்தவரமெனக்கருள் நந்தகோபர்மைந்தனே
எந்தநாளுமுன்தனைச் சிந்தைசெய்துகந்திடும் (இந்த)

வட்டவதனதிலகமும் வனஜலோசனங்களும்
கட்டுசாயக்கொண்டையுங் கண்டுமகிழ்ந்துகைதொழும் (இந்த)

நித்திலத்தைநேர்தரு நிலவுகாலுமாரமுங்
கைதலத்திலுற்ற வேணுகானமுந்தியானமே (இந்த)

மதுரமொழுதமிதழையும் மலர்ந்தபவள வாயையுங்
குதலைமொழியினெழிலையுங் கொண்டகொண்டல் வண்ணனே
(இந்த)

முகத்தலைந்த சுட்டியும் முகுரநேர்கபோலமுந்
தொகுத்த பீலித்தொங்கலுந்துளவு மிலங்கவந்து நீ (இந்த

மின்னுவயிர குண்டலம் விளங்கு நாசியணிகளும்
பொன்னின் மார்பிலாரமும் புகழுநெஞ்சமகிழவே (இந்த)

கட்டிவிட்டவரலுடன் கான்மடித்துத்தவிழ்ந்து போய்
ரெட்டைமருது சாய்த்தவந்த ரெஞ்சிதப்பதாம்புஜா (இந்த)

செங்கைகொண்டு பங்கயச்சிறியபாதப் பெருவிரல்
தங்குமமுதவாய் மடுத்த சார்வபௌமனேமனே (இந்த)

உவந்துதந்தவ வலெடுத்துண்டு மகிழ்ந்துகொண்டு நீ
யவந்திநகரமாதவற் கருள்புரிந்ததில்லையோ (இந்த)

புத்துருக்கு வெண்ணெய்பால் பொதுவர்மாதராருறி
வைத்தசட்டி தகர்த்தருந்தும் வண்ண நீலவண்ணனே (இந்த)

குரவைபிணைத்து மங்கையர்குதித்தல் கண்டுகப்பதுஞ்
சிரசிற்குடம் வைத்தாடுவோர் சேர்க்கைகொண்ட தீர்க்கனே
(இந்த)

வாஸமிக்கு மலர்த்தொடை வாடுமென்றுநாடியே
தாஸன்பிச்சுகவி நன்மாலை சாற்றியேற்றிப் போற்றினேன் (இந்த)

காவடிச்சிந்து முற்றிற்று.